# இன்னும் ஒரு திங்கள்



புலவர் ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் ஒரு திங்கள்

## குறுங்காவியம்

புலவர் ம. பார்வதிநாதசிவம்

வெளியிடுபவர் :
வி. ஆறுமுகம்
(ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு
1988 யூலை
விலை ரூபா 10-00
அச்சுப் பதிவு
காந்தன் அச்சகம்
தெல்லிப்பழை
உரிமை: ஆசிரியருக்கே

**INNUM ORU THINKAL**

*AUTHOR*
**PULAVAR**
**M. PARVATHINATHASIVAM**
First Edition
JULY 1988
Price Rs. 10-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை:

**கலாநிதி நா. சுப்பிரமணியன்,**
*விரிவுரையாளர், தமிழ்த்துறை*
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

நாடறிந்த கவிஞரும் பத்திரிகையாளருமான புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள் மரபாலும் சூழலாலும் பயிற்சியாலும் தமிழ்ப்புலமை கைவரப்பெற்றவர்; சமூக நோக்குடைய இலக்கிய நெஞ்சத்தின் உடைமையாளர்; கவிஞர் மஹாகவியால் "எமது எதிர்கால எதிர் பார்ப்பு" எனச் சுட்டியுரைக்கப்பட்டவர்; இலக்கிய கலாநிதிகள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, க. கைலாசபதி ஆகியோரின் கணிப்பைப் பெற்றவர்; காதலும் கருணையும் (*1972*), இருவேறு உலகம் (*1980*) ஆகிய கவிதைத் தொகுதிகளையும் இரண்டு வரம் வேண்டும் (*1985*) என்ற குறுங்காவியத்தையும் நூல் வடிவில் தந்தவர்; இவற்றில் இரண்டாவது ஆக்கத்திற்கு இலங்கை சாஹித்ய மண்டலத்தின் பரிசில் பெற்றவர். இவரது நான்காவது வெளியீடாக மலர்வது இன்னும் ஒரு திங்கள் என்ற இந்தக்குறுங்காவியம்.

இக்குறுங்காவியத்தின் 'கரு' கணவன் மனைவி உறவில் காணப்படும் பொருந்தாநிலை ஆகும். மனைவியை ஐயுற்று அடக்கியாள முயலும் ஒரு கணவனது மனக்கோணலே இதன் கதைவித்து. இதனால் அல்லலுறும் தமிழ்ப்பெண்மையின் அவலமே காவியமாக விரிகிறது. ஐயுற்றுக் கொடுமையாளனாக நடந்துகொள்ளும் கணவன் தனக்கு மரணநோய் ஏற்பட்டுவிட்டது என்று அறிந்துகொண்ட வேளையில் மனமாற்றமடைந்து கழிவிரக்கங் கொள்கிறான்; மன்னிப்புக் கோருகிறான். இன்னும் ஒரு திங்கள் மட்டும் அவன் உயிருடன் இருப்பான் என்ற நிலையில் அவளது எதிர்காலம் வினாக்குறியாக நிற்பதுடன் காவியம் நிறைவுபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் கதைத் தலைவி பூங்கோதை பாரம்பரியத் தமிழ்ப்பெண்மையின் சமகாலப் பதிப்பு. கதைத் தலைவனை ராஜன் சமகால சமூகத்தின் பலவீனங்கள் பலவற்றின் கூட்டுருவாக அமைந்த சராசரி மனிதன். அவள் ஆசிரியை; கருணையும் பணிவும் பொருளை வாரி வழங்கும் பண்பும் மிக்கவள். அவன் சட்டத்தரணி; நீதிக்கு எதிர்ப்புறத்தே நின்று வாதாடும் இயல்பினன்; பணம் பண்ணுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவன். இவ்வாறு இருவரையும் தொடக்கநிலையிலேயே அறிமுகம் செய்துள்ள கவிஞர், அவர்களது மணம் பொருந்தா இணைப்பு என்பதை வெளிப்படுத்திவிடுகிறார். அவளுடைய நண்பன் மீது இவனுக்கு பொறாமையும் ஐயமும் விளைகின்றன. அவளுடைய கருணையும் சுற்றத்தைப் பேணும் உணர்வும் இவனது பொருளாசையாலும் புறக்கணிப்பு மனப்பாங்கினாலும் கட்டுப்படுத்தப் படுகின்றன. இவ்வாறெல்லாம் அவளை வருத்தியவன் தனக்கு மரணம் வரப்போவதை உணர்ந்தபோது,

"இன்னுமொருதிங்களிலே என்றன் வாழ்வு
இற்றுவிடும் என்பதனை அறிந்தேன் இந்நாள்
முன்னெனக்கு மரணமது நிசம் என்கின்ற
முழு உண்மை தெரியாமற் போனதாலே
உன்வாழ்வை நான் கெடுத்தேன்..........."

"உறவினரைக் கூப்பிடுவாய் பார்த்தல்வேண்டும்
உயர்ந்தோரை அழைத்திடுவாய் வணங்கல்வேண்டும்
அறமனைத்தும் செய்வதற்கே என்செல்வத்தை
அள்ளி அள்ளிக் கொடுத்திடுவாய்..........
நெறியுடையோய் உனைக்கட்டுப் பாட்டுள் வைத்த
நீசனெனை நீ பொறுத்துக் கொள்ளவேண்டும்"

என்றெல்லாம் ஒப்புதல் வாக்குமூலமளித்து வேண்டுகோள் விடுக்கிறான். மரணம் வருகிறது என்பதை அறியும் வேளையில் மனிதன் தன் தவறுகளை உணர்ந்துகொள்ள முற்படுகிறான். என்பதைகவிஞர் உணர்த்திநிற்கிறார். அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு மரண எதிர்பார்ப்பு நிலையில் தவறுகளை உணர்வதால் என்ன பயன்? இழந்தது இழந்தது தானே! இறப்பிலும் இழப்புத்தானே தொடரப் போகிறது. எனவே வாழும் காலத்திலேயே தவறுகளை உணர்ந்து திருத்திக்கொண்டு அன்பையும் இன்பத்தையும் பேணிக் கொள்ளுங்கள் என்று கவிஞர் சுட்ட விழைவது தெரிகிறது.

இக் குறுங்காவியத்தின் கருவான "கணவன் மனைவியுறவு பொருந்தா நிலை"க்கான காரணிகள் தொடர்பாகவும் தமிழ்ப்பாரம்பரியப் பெண்மை தொடர்பாகவும் கவிஞர் கொண்டிருந்த கருத்துக்கள் துரை என்ற பண்பாளன் வாய்மொழியாக வெளிப்படுகின்றன. துரை தனது உரையொன்றிலே,

பெண்ணிலுமே பெருந்தக்க உளவோ என்றே
பெரும்புலவர் வள்ளுவனார் கேட்டார் அன்றே
"மண்ணிடையே மங்கையராய்ப் பிறத்தற்குதான்
மாதவமே வேண்டு" மென்றான் ஒருவன்..........

என வள்ளுவரும் கவிமணியும் கண்ட பெண்மையைச் சுட்டிவிட்டு அத்தகுபெண்மை சமகாலத்தில் எய்தியுள்ள நிலையை,

"சீதனத்தின் பெயராலே ஒரு பெண்ணுளோ
தீயினுக்குப் பலியாவாள் இன்னோர் பெண்ணே
ஏதறியாக் கணவனது சந்தேகத்தால்
இருங் கிணற்றுள் வீழ்ந்திடுவாள் வேறோர்
-பெண்ணோ

ஆதனந்தான் குறைவென்ற காரணத்தால்
அப்பனது பிணமதனைப் பார்க்கத்தானும்
நாதியற்றுக் கணவனது வீட்டிருந்தே
நலிவுற்றுக் கண்ணீரைச் சிந்துவாளே."

என எடுத்துக் காட்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் குறுங்காவியம் சிலப்பதிகாரத்தைப்போல மனை மங்கலத்துடன் தொடங்குகிறது. கவிஞர் கூற்றாகவும் பாத்திரங்களின் கூற்றாகவும் கதை கூறப்பட்டு ஈற்றில் அவலச் சுவையுடன் நிறைவுபெறுகிறது. மரத்தில் வீழும் நிலையில் தொங்கும் ஓலை மரணத்தை எதிர்நோக்கி நிற்கும் அவலத்தின் குறியீடாக உள்ளது. வாசித்து முடிக்கும்போது கதைத்தலைவன் மரணமடையத்தான் வேண்டுமா? அவன் மீளலாகாதா? என்ற வினா எழுவது இயல்பு. அல்லது மனைவியை "மறுமணம் செய்து மங்கல வாழ்வு பெறு" என அவன் வாழ்த்தியிருக்கலாகாதா? என்ற வினாவும் எழலாம் இப்படி எல்லாம் கதை முடிவுகளைத் தொட்டுக் காட்டமுயன்றுள்ள அவர் தீர்வுக்காக வெளிப்படையாக எதனையும் கூறவில்லை. எமது மனச்சாட்சியை "இது நியாயமா?" எனச்சிந்திக்க வைத்து அமைகிறார்.

இன்றைய ஈழத்துக் கவிஞர்களுள் புலவர் என்ற தகுதிக்குரிய பார்வதிநாதசிவம் அவர்கள் மரபிலே ஆழமாகக் காலூன்றி நிற்பவராயினும் சமகால முரண்பாடுகளிலிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ளாதவர் என்பதையும் மாறுபாடுகளையும் பதிவுசெய்து காட்டக் கூடிய நேர்மை உள்ளவர் என்பதையும் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் பதினாறு ஆண்டுகட்கு முன்பே இனங்கண்டு சுட்டியுள்ளார். (இலக்கிய வழியில் இனிய நறுமலர் - 1972) கைலாசபதி அவர்கள் இனங்கண்ட அந்த நேர்மையைத் தமது ஆக்கங்களில் தொடர்ந்து பிரதிபலித்து வந்துள்ளவர் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் ஒரு திங்கள்

## திருமணம்

திங்கள்நேர் முகத்தி னாளைச்
செவ்விதழ் மலரி னாளைத்
தங்கநேர் மேனி யாளைத்
தழல்நிகர் கற்பி னாளைப்
பங்கய மலர்த்தேன் அன்ன
பைந்தமிழ்ச் சொல்லி னாளை
மங்கையர் அழைத்து வந்தார்
மணவறை நோக்கி மெல்ல.

காரென்ற கூந்தல் கொண்டும்
கனியென்ற இதழைக் கொண்டும்
வாரொன்று மார்பைக் கொண்டும்
மாசிலா அழகைக் கொண்டும்
தேரொன்றே அசைதல் போலத்
தேவதை வருதல் போலப்
பாரிடை வருகின் றாளைப்
பாவையர் அழைத்து வந்தார்.

இல்லறம் என்ற காவிற்
கிதுவழி என்றே யாரும்
சொல்லிட அமைந்த தான
எழில்மண வறையை நோக்கி
மெல்லடி எடுத்தே வைத்து
மேதினி வியக்க வந்தாள்
சொல்லரும் தோழி மார்கள்
சூழ்ந்தங்கே அழைக்க லானார்.

கைவலோன் செய்த சிற்பம்
கலைவலோன் செய்த பாடல்
பொய்யிலான் உரைத்த வார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

800.0385

போலவே விளங்கு வாளை
வையவாழ் வெவ்வா றென்றே
வகுத்திடும் மணவாழ் வுக்குத்
தையலார் அழைத்து வந்தார்
தமிழென வாழ்க வென்றார்.

கற்பனை அனைத்தி னுக்கும்
கனவுக்கும் நனவி னுக்கும்
நற்பொருள் தானே ஆய
நன்மண வறையை நோக்கிப்
பொற்புறு கொடிபோல் வாளைப்
பூவையர் அழைத்தே வந்தார்
சிற்றிடை பாரத் தாலே
தெறித்திடா வண்ணம் வந்தாள்.

அந்திவான் நிறத்தி னுட்கே
அணிசெய்தல் வேண்டா என்ற
விந்தையை அறியாராகி
மேலும்ஒப் பனைகள் செய்தே
பந்தத்தைப் பாசம் தன்னைப்
பாரிடை வளர்ப்ப தான
அந்தநல் மணவ றைக்கே
அழைத்திட்டார் தோழிப் பெண்கள்.

மாவிலை தோர ணங்கள்
மலர்ச்சரம் நிறைகு டங்கள்
தேவுல கிதுவே யென்று
செப்பிடும் அலங்கா ரங்கள்
காவிநேர் விழியி னார்தம்
கைவண்ணச் சிறப்புக் காட்சி
யாவையும் கொண்ட தாக
விளங்கிற்றே அந்தப் பந்தல்.

அத்தகு பந்தற் கண்ணே
அமைந்திட்ட மணவ றைக்கண்
மெத்தவும் மகிழ்வி னோடே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவிய மணாளன் தானும்
சித்திரம் ஒன்றே அங்கு
தேசுடன் வருதல் கண்டே
வைத்தகண் வாங்கா ஞனன்
வனப்புக்குப் பொருள்தேர்ந் திட்டான்.

பந்தலில் இருந்த மக்கள்
பாவையின் அழகைப் பார்த்தும்
வந்துள மணாள ஞரின்
வடிவினை உற்றுப் பார்த்தும்
இந்தப்பே ரழகி னட்கிங்
கிவன்துணை யாவ தற்கே
எந்தவோர் தகுதி கொண்டான்
எனத்தம்முட் கேட்டுக் கொண்டார்.

மான்களின் சோடி போல
மணிப்புருச் சோடி போல
தேன்குரற் கிள்ளை தம்முட்
சேர்ந்திடும் சோடி போல
வான்வரை விரையும் சிட்டுக்
குருவியின் சோடி போல
ஏன்பெரும் பாலும் மக்க
ளிடைச்சோடி பொருந்தா தென்றார்.

## மணமகள், மணமகன்

மணமகள்பூங் கோதையினை ஊரார் எல்லாம்
மகிழ்வுடனே "கோதை" என அழைத்துக் கொள்வார்
பணிமொழியே சொல்லுமவள் பள்ளி தன்னில்
பயிற்றுவிக்கும் பண்பார்ந்த தொழில்மேற் கொண்டாள்
குணமேவும் அவள்மதிப்பால் அந்த ஊரே
கூடியது மணவிழவு காண வென்றே
அணிசெய்தார் ஊரெல்லாம் எல்லார் நெஞ்சும்
அளப்பரிய உவகையினுற் சிறந்த தாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்ற தொழிலினையே தெய்வ மாகச்
சேவிக்கும் குணமுடையாள் வறியோர்க் கெல்லாம்
பெய்கின்ற மழைபோல்வாள் தானு ழைத்த
பெரும்பகுதி மாணவர்க்கே உதவல் செய்வாள்
உய்கின்ற நன்னெறியே கற்போர்க் கென்றும்
உரைத்திடுவாள் ஆதலினல் ஊரோர் எல்லாம்
பெய்வளையாள் வயதிளையாள் எனினும் பண்பார்
பெரியார்க்குச் செயும்மதிப்பை அவட்குச் செய்வார்.

மன்றலுக்கு வந்திட்ட மணுளன் தன்னை
'ராஜன்' என அழைத்திடுவார் அவனே நீதி
மன்றேறி நீதிக்கே எதிர்ப்பு றத்தே
நின்றேதான் வழக்காடும் சட்ட ஞானி
என்றேயும் பணம் சேர்க்கச் சட்டஞானம்
ஏற்றதென அவன்நினைத்தான் உழைத்தல் செய்தான்
இன்றேயும் சீதனமாய்ப் பலலட் சங்கள்
எய்துகின்ற பேற்றினனுய் இருக்கின் றனே.

மற்ருேர்க்குப் பயன்படுதல் சற்றும் எண்ணுன்
மற்ருேராற் பெறும்பயனே கருத்திற் கொள்வான்
உற்ருேரிற் பற்றுமிலான் அதேபோ லத்தான்
உயர்நண்ப ரெனமனத்தும் வைத்துக் கொள்ளான்
கற்ருேரைக் கலைஞர்தமை மதித்தல் செய்யான்
கருணையெனும் வார்த்தையினை நினைத்தும் பாரான்
உற்றதொரு உறவெல்லாம் அவனுக் கிந்த
உலகத்தே பணமொன்றே பணமொன் றேதான்.

மங்கலவாத் தியத்துடனும் வேதம் வல்ல
அந்தணர்மந் திரத்துடனும் ஆசி யோடும்
மங்கலநாண் பூங்கோதை கழுத்திற் சேர்ந்தே
''வாழ்விதுதான்'' எனஅவட்கே உரைத்த பின்னர்
அங்கொருவன் வாழ்த்துப்பாக் கொண்டு வந்தே
அழகுதமிழ்க் கிசைச்சுவையும் சேர்ப்பா னுகி
மங்கலவாழ்த் துப்பாடல் பாட லானுன்
மனமுவந்து யாவருமே கேட்க லானுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண வாழ்த்து

''இல்லறமாம் பூம்பொழிலே இந்நாள் எய்தும்
இளமைபொலி வாழ்வுடையீர் நீவிர் என்றும்
எல்லமைந்த நறுமலரும் மணமும் போலும்
இனிமைமிகு தமிழ்க்கவியும் அழகும் போலும்
சொல்லுமகன் உடன்விளங்கும் பொருளும் போலும்
சுகம்ஒன்றே வந்தெய்த நீடு வாழி
நல்லறமே வழியாகச் சான்றோர் ஆசி
நாளெல்லாம் துணையாக வாழி வாழி''.

''ஒருயிர்க்கா ஒருயிர்நின் றிரங்கல் வாழ்வு
ஒருயிரை ஒருயிர்தான் புரிதல் வாழ்வு
ஒருயிரால் ஓர்உயிர்நன் றெய்தல் வாழ்வென்
றுயர்ந்தோர்கள் சொல்லிடுவார் மணவாழ் வுற்ற
நீரிதனைப் புரிந்திடுவீர் ஈரு டற்கும்
நிலைத்த உயிர் ஒன்றாக என்றும் வாழ்வீர்
பாரிலுள்ளோர் பண்பான வாழ்வு தன்னைப்
பார்க்கட்டும் உம்மி''லென்றும் பாட லானான்.

ஆடவரும் அதிசயிக்கும் அழகு வாய்ந்தோன்
அருங்குரலிற் பாடியபின் சட்டம் இட்ட
பாடலினை மணமக்கள் கையிற் சேர்த்தான்
பக்கத்தே நின்றொருவர் ராஜ னுக்கு
''நாடறிந்த தமிழ்அறிஞன் அயலில் வாழ்வோன்
நம்மூரார் மெச்சுபல திறமை கொண்டோன்
தேடரிய குணக்குன்று துரைபேர்'' என்றே
செப்பினார் ராஜனுமே வணக்கம் சொன்னான்.

வரிசையிலே மாணவர்கள் வந்து வந்து
வகைவகையாய்ப் பலப்பலவாய் மணமக் கட்குப்
பரிசளித்தார் பூங்கோதை உடன்கற் பிக்கும்
பலருமங்கே வருகைதந்தே வாழ்த்துச் சொன்னார்
அரியபல குணம்வாய்ந்த பெரியோர் எல்லாம்
ஆசியினை அவர்களுக்கு வழங்க லானார்
பெருமிதத்திற் பூங்கோதை பெற்றோர் தாமும்
பேரன்புச் சுற்றமுமே திளைக்க லானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழவினிலே நிகழ்வதெல்லாம் பார்த்தோ னுய
மணமகனே தன்னுள்ளே எண்ண லானுன்
அழகினிலும் பூங்கோதை வென்ருள் என்னை
அதேபோலச் செல்வாக்கால் தானும் வென்ருள்
பழகுகின்ற சுற்றத்தோர் நண்பர் கூட்டம்
பார்க்கையிலும் அவளுக்கே வெற்றி ஆகும்
வழக்கறிஞர்த் தொழில்புரிந்தும் நானே என்றன்
மனைவியினும் செல்வாக்கிற் குறைந்தேன் என்றே:

திருமணம்தான் முடிந்துவிட்ட சிலநாட் பின்னர்
கீரிமலை யெனும்பதியின் கடலோ ரத்தே
பெருமணலின் பரப்பினிலே ஒருங்கி ருந்தே
பெருகுகின்ற கூட்டத்தைப் பார்த்த வாறே
இருவரும்தம் குலப்பெருமை வாழ்வின் கண்ணே
இதுவரையும் புரிந்திட்ட வெற்றி எல்லாம்
பெருமையுடன் பேசினரே அந்த வேளை
பேரழகில் இயற்கைமகள் காட்சி செய்தாள்.

வானத்தைப் பொன்னுக்கி விடுவோ மென்று
வானவர்கள் செய்தஒளி மருந்தோ? அன்றி
வானத்தின் திலகமோ? மரங்கள் தந்த
மலர்கட்கு வண்ணமிடும் கலைஞன் தானே
நானிலத்தின் ஏழைகட்கும் செல்வந் தர்க்கும்
நடுநிலைமை வகிக்கவைத்த பொன்வி ளக்கோ
பானுவே நீயென்று வியக்கும் வண்ணம்
பரிதிஒளி நல்கினன் மேற்கு வானில்.

கற்பனைபோற் பெருகிவரும் அலையைக் கொண்ட
கடல்செய்யும் சேவையினைப் போற்ற எண்ணி
அற்புதப்பொன் னுடையினைக் கதிரோன் போர்த்தான்
அதுகண்டு கலைமனத்தோர் மகிழ்தல் செய்தார்
உற்றிருந்த வெப்பம்போய்க் குளிர்ந்த காற்றை
உலவென்றே அனுப்பியதால் அங்குள் ளோர்கள்
பெற்றசுக அனுபவம்தான் வார்த்தை கொண்டே
பேசுகின்ற தன்மையினைக் கடந்த தாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரை வருகை

அப்போது ராஜன்தம் பதிகள் பக்கம்
அழகெல்லாம் திரண்டெடுத்த வடிவம் கொண்டோன்
எப்போதும் இன்மொழியே பேசும் பண்பன்
இனியநகை செய்தபடி அயலில் வந்தே
செப்பிநின்றான் வணக்கங்கள் இவர்கள் தாமும்
சிறியநகை யுடன்வணக்கம் என்று சொன்னார்
எப்போதும் நல்லனவே எண்ணு கின்ற
ஏந்திழையாள் தன்துணைவன் முகத்தை நோக்கி

''எங்களது திருமணம்தான் நிகழ்ந்த போதில்
இன்குரலால் வாழ்த்துப்பாப் பாடி வைத்த
தங்கநிகர் குணமுடையார் இவரே'' என்றாள்
ராஜனுமோ ''நான்மறவேன்'' என்று பின்னர்
உங்களது வாழ்த்துப்பா நன்றே என்றான்
ஒண்டொடியாள் தன்கணவன் பக்கம் நோக்கி
''சங்கமுதல் இன்றுவரை உளநூல் எல்லாம்
சந்தேகம் சிறிதுமின்றிக் கற்ற மேதை.

ஆங்கிலத்தும் சேக்ஸ்பியரை பேர்னாட் ஷாவை
அழகாக விளக்குகின்ற ஆற்றல் கொண்டார்
தீங்கரும்பே இனிக்குமென்பார் இவரின் பேச்சைச்
செவிமடுத்த பின்கருத்தை மாற்றிக் கொள்வார்
ஆங்குபல முறைநானும் இவரின் பேச்சைக்
கேட்டதுண்டே அற்புதம்தான்'' என்றும் சொன்னாள்
பூங்கோதை கூறியதைக் கேட்ட ராஜன்
பொற்றொடியாள் மெய்ப்பாட்டை உற்றுப்பார்த்தான்

எண்ணரிய குணமுடையாள் வீட்டி ருந்தே
எடுத்துவந்த ''பிஸ்கட்டைத்'' தட்டில் வைத்தே
தண்ணளிசேர் துரையென்னும் தமிழ்கற் றோற்குத்
தான்கொடுத்துப் பின்னர்தன் துணைவ னார்க்கும்
உண்ணுமெனக் கொடுத்திட்டாள் தேநீர் தானும்
பிளாஸ்க்கினிலே இருந்தெடுத்துக் கொடுத்தாள்.

ராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்ணெனவே கற்பனையாம் வலையைப் பின்னித்
தன்னையதிற் சிறைப்படுத்திக் கொண்டான் அன்றோ

தன்துணையை ஐயுறுவோன் நெஞ்சம் போலத்
தரையெல்லாம் இருண்டிடவே கோதை தானும்
''இன்னுமிங்கேன் இருந்திடுவான் வீடு செல்வோம்''
எனஉரைப்பத் துரைஎன்பான் விடைபெற் றேகக்
கன்னல்நிகர் மொழியாளும் ராஜன் தானும்
கடிதினிலே பஸ்ஏறி வீடு சேர்ந்தார்
நன்மையினைத் தீமையினைப் பிரித்துப் பார்க்கும்
தன்மையிலா ராஜனுமே மௌனம் கொண்டான்.

கடற்கரையால் திரும்பியதாம் நேரம் தொட்டுக்
கதையாமல் இருந்தோனைக் கோதை பார்த்தே
''உடற்கேதும் நிகழ்ந்ததுவோ இருந்தாற் போல
உங்களுக்கேன் மௌன''மென மெல்லக் கேட்டாள்
''இடரேதும் செய்யாதே சிறிது நேரம்
எனைத்தனிமை யாய்இருக்க விடுவாய்'' என்றான்
மடக்கொடியோ மனம்நொந்தே அட்டில் சென்றாள்
மற்றவனோ பற்பலவும் எண்ண லானான்.

## ஐயமெனும் கொடுநோய்

மங்கையர்க்குள் இவள்அழகி துரைஎன் பானோ
மாநிலத்தே தனிஅழகன் இன்று மாலை
அங்குகடற் கரையினிலே இருந்தோர் எல்லாம்
அவனையும்என் துணையையுமே உற்றுப் பார்த்தார்
பொங்குகின்ற உவகையுடன் கோதை தானும்
புவியிடையே வணக்கங்கள் கூறலானாள்
இங்கிவர்தம் நிலைஎன்ன அதனைப் பற்றி
என்வரையில் ஆராய்வோம் எனநி னைத்தான்.

இருவருமே ஓரிரவைப் பேச்சே இன்றி
எவ்விதமோ கழித்திட்டார் மறுநாட் காலை
விரைவாக உணவுதனைச் சமைத்த கோதை
துணைவனுக்குப் பரிமாறும் வேளை தன்னில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அரியதமிழ் விழாவொன்றே கல்லூ ரிக்கண்
அமையவுள தாதலினல் இன்று நானே
வருவதற்குத் தாமதமே ஆகும்'' என்றாள்
வார்த்தையின்றித் தலையசைத்தே ராஜன் உண்டான்.

பைந்தமிழிற் பற்றுடைய கோதை தானும்
பள்ளிசென்றாள் தமிழ்விழவின் ஆயத் தம்தான்
சிந்தையிலே நிலைத்துவிட்ட கார ணத்தால்
சிறிதேனும் பிறநினைப்பே அற்றாள் ஆனாள்
எந்தவிதப் பணியையுமே சிறப்பாய்ச் செய்யும்
ஏந்திழையாள் மாணவர்தம் உதவி யோடும்
அந்தவிழாச் சிறப்பாக நடத்த லானாள்
அதிபரொடு யாவருமே வியக்க லானார்.

கலைநிகழ்ச்சி நிகழ்வதன்முன் "துரைஎன் கின்ற
கற்றறிந்தோன் சொற்பொழிவு நிகழு'' மென்றார்
அலைஅலையாய்க் கருத்தனைத்தும் மேடை தன்னில்
அள்ளிவழங் கிடுவோனும் அவையை நோக்கி
''விலைமதிக்க முடியாத நம்செல் வங்காள்,
வீற்றிருக்கும் பெரியீர்காள், நானே இன்று
நிலைகுலையா மாதர்தம் பெருமை பற்றி
நிகழ்த்தவுளேன் பேச்''சென்றான் தொடர்ந்தான்
பேச்சை

## பெண்ணின் பெருமை

''பெண்ணினுமே பெருந்தக்க உளவோ என்றே
பெரும்புலவர் வள்ளுவனார் கேட்டார் அன்றே
''மண்ணிடையே மங்கையராய்ப் பிறத்தற் குத்தான்
மாதவமே வேண்டு'' மென்றான் ஒருவன் பின்னர்
எண்ணிடுவீர் மாதர்தமைச் சான்றோர் நூல்கள்
எவ்வாறு போற்றினஎன் பதையும் இந்நாள்
கண்ணியமே அறியாதோர் சமுதா யத்தே
கருதுகின்ற நினைவையுமே'' என்றான் பின்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அரசியலில் மாதரினைக் காணு கின்றோம்
ஆசிரியத் தொழிலிலும்தான் காணு கின்றோம்
பெரியபல பதவிகளில் நாம்பார்க் கின்றோம்
பேசுபல தொழில்களிலும் நாம்காண் கின்றோம்
சரிசமமே மாதரென இதனைக் கொண்டே
சாற்றுகின்றார் ஆனாலும் வீடு தோறும்
எரியிலுறு புழுவாகக் கற்பின் மிக்கார்
இன்றுதுடிக் கின்றார்கள் அறியீ ரோநீர்''

''சீதனத்தின் பெயராலே ஒருபெண் ணாளோ
தீயினுக்குப் பலியாவாள் இன்னோர் பெண்ணோ
ஏதறியாக் கணவனது சந்தே கத்தால்
இருங்கிணற்றுள் வீழ்ந்திடுவாள் வேறோர் பெண்ணோ
ஆதனம்தான் குறைவென்ற கார ணத்தால்
அப்பனது பிணமதனைப் பார்க்கத் தானும்
நாதியற்றுக் கணவன்தன் வீட்டி ருந்தே
நலிவுற்றுக் கண்ணீரைச் சிந்து வாளே.

''உறவினர்தம் வீட்டிற்கும் விடேனே'' என்றே
உரைத்திடுவான் ஒருகணவன் இந்த வீட்டின்
''மறுபுறமும் நோக்காதே என்று சொல்லி
வாய்வலிக்கக் கத்திடுவான் ஓர்ம ணாளன்
''பெறுகின்ற சம்பளத்தை என்னி டத்தே
அப்படியே கொடு''என்பான் ஓர்மெய் அன்பன்
முறையறியா ஆடவரால் வீடு தோறும்
மொய்குழலார் துடிக்கின்றார் அறியீ ரோநீர்''

''கற்பிக்கும் தொழில்கொண்டீர் உங்கட் கெல்லாம்
கனிவான வேண்டுகோள் உங்கள் பக்கம்
கற்கவென வருவோர்க்கு மாதர் தம்மைத்
தெய்வமென மதிக்கின்ற பண்பு தன்னை
முற்றாக வளர்த்திடுவீர் எதிர்கா லத்தே
மொய்குழலார் கண்கலங்கா நிலையைச் சேர்ப்பீர்
உற்றதென்றன் பேச்சதனைக் கேட்ட மைக்கே
உளமார நன்றி''யென முடித்தான் பேச்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையினுல் இறங்கிவந்த துரையை நோக்கி
மெல்லியலாள் கோதையுமே விரைந்து சென்று
"கோடிநன்றி உரைககின்றேன் உங்கள் பேச்சாம்
குளிர்புனலிற் குளித்திட்டேன் மகிழ்ச்சி" என்ருள்
"நாடிருக்கும் நிலையதனை உரைத்தேன் என்றே
நவின்றிட்டான் துரைதானும் அந்த வேளை
மேடையின்கீழ் அயலினிலே நின்ற ராஜன்
விரைந்தவர்முன் வந்திட்டான் சினத்தி னேடே

"இப்போதே புறப்படுவாய் வீடு செல்வோம்"
என்றிட்டான் அதற்காகக் கோதை தானும்
"இப்பெரிய விழாநடத்தும் பொறுப்புத் தன்னை
என்தலையில் அதிபர்தான் இட்டார்" என்ருள்
"அப்பதில்லை நான்ஏற்கேன் என்தன் பேச்சை
அவமதித்தல் செய்யாதே புறப்ப" டென்ருன்
ஒப்பில்லா உளத்தினர்பால் அதிபர் தானும்
ஓடிவந்தே நிலைமையினை நோக்க லானுர்:

## புரியா உள்ளம்

கர்ப்பூர வாசனையை மாலை தன்னைக்
கணித்தறியா ராஜனென்பான் கோதை என்ற
குற்றமிலா மங்கையினை வீட்டினிற்கே
கொண்டுசென்ருன் வீடுசென்ற கோதை தானும்
"உற்றபெரும் துயராலே கண்ணீர் சிந்தி
உளத்தெழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டே
குற்றமென்ன நான்புரிந்தேன் எதற்காய் என்னைக்
கூட்டிவந்தீர் விழாமுடியு முன்னே" என்ருள்.

"திங்கள்பல கலைநிகழ்ச்சி சிறத்தற் காகச்
செகத்திடைநான் செய்தபெரும் உழைப்புத் தன்னை
அங்குசிறு பொழுதிருந்து பார்க்கா வண்ணம்
அழைத்துவந்தீர் என்னுடனே கற்பிக் கின்ற
மங்கையரும் அதிபரும்நம் குடும்பம் பற்றி
மனத்தென்ன நினைப்பரெனச் சிந்தித் தீரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கென்ன குழப்பமென எதுவும் தேரேன்
ஏன் மௌனம்'' என்றவளும் கேட்கலானாள்.

''குற்றமின்றி யாரேனும் கொதித்தல் உண்டோ
குற்றமுண்டு கூறுதற்காம் சந்தர்ப் பம்தான்
உற்றிடும்போ தினில் உரைப்பேன்'' என்றேஅன்னான்
உரைத்திடலும் பூங்கோதை அவனை நோக்கிக்
குற்றமுளார் தமைநல்லோர் ஆக்கு தற்கே
கோட்டினிலே வாதாடி வீட்டில் வந்தே
குற்றமிலார் தம்மீது குற்றம் காணும்
கொள்கையெந்தச் சட்டநூல் ஞானம் என்றாள்.

''கற்பனையாற் கவிதைமுதற் கலைகள் யாவும்
காலமெலாம் வளர்ந்திடலாம் குடும்பம் என்னும்
பொற்பமைந்த விருட்சத்தை வளர்ப்ப தற்கும்
போய்அந்தக் கற்பனையைச் செய்தல் நன்றே
பற்பலநான் கூறவில்லைக் குறைகள் இன்றிப்
பாரிடையே அமைந்திட்ட எங்கள் வாழ்வை
அற்பநிலைக் காக்காதீர்''' என்றே கூறி
அழுதபடி மன்றாடிக் கேட்டாள் கோதை.

கல்லூரி வாசலினை மறுநாட் காலை
கவலையுடன் பூங்கோதை அடைந்த காலை
நல்லுளமும் கருணையுமே கொண்டாளான
நளினிஎனும் ஆசிரியை விரைந்து வந்தே
''அல்லலுற்றே கலைநிகழ்ச்சி அதனைத் தானும்
அணுகமன மில்லாமல் இருந்தேன் நேற்றே
சொல்லுகநின் கணவனேன் நேற்றக் கோலம்
கொண்டிட்டான் என்பதையும்'' என்றே கேட்டாள்.

என்னிடத்தே ஏதோஓர் குற்றம் தன்னை
என்கணவர் கண்டதுபோற் சீறுகின்றார்
என்னகுற்றம் என்றவரை நானே கேட்டேன்
எதனையுமே உரையர்மற் சினம்கொள் கின்றார்
நன்மைநிறை நெஞ்சுடையாய் அவர்கண் ணுக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவராய் யாவருமே தெரிவ தில்லை
என்னகுறை எங்குகுறை என்ப தெல்லாம்
எப்படியும் சிலநாளில் தெரியும் என்றாள்.

## நளினி அறிவுரை

பூங்கோதை தனைநோக்கி நளினி என்பாள்
''பொற்கொடியே கலங்காதே ஆரம்பத்தில்
ஈங்கிதுபோல் ஒருவரினை ஒருவர் தாமும்
எள்ளளவும் புரியாமற் சினத்தல் உண்டு
தீங்கேது நன்றேதென் றாயும் தன்மை
சிலகாலம் சென்றபின்தான் வந்து சேரும்
ஏங்காதே நின்வாழ்வு நொறுங்க வில்லை''
இருந்துபார் சிலநாளில் யாவும் மாறும்.

''ஆனாலும் ஒன்றுரைப்பேன் ஆண்கள் தம்மில்
அளவற்றோர் சந்தேகம் என்ப தான
வீணான மனநோயால் விடமுண் டார்போல்
வெந்துகொண்டே இருப்பார்கள் இன்ப மென்னும்
தேனூற்றைப் பருகாதே இளமை முற்றும்
சென்றபின்தான் அவர்களுக்கு ஞானம் தோன்றும்
மானேநீ வருந்தாதே நின்தன் பண்பை
வையகமே முற்றாக அறியும் அன்றோ''.

''அன்பாலே மாணவரைக் கொள்ளை கொண்டாய்
அருமுழைப்பால் நிர்வாக மதிப்பைப் பெற்றாய்
பண்பாலே ஊரவர்க்குத் தெய்வ மானாய்
பாவையர்க்கோ வழிகாட்டும் நூலும் ஆனாய்
என்னேஇவ் வழகென்றே கண்டோர் யாரும்
எண்ணுகின்ற பெருவனப்பும் நின்பாற் கொண்டாய்
பின்னேதான் வருந்திடுவான் கணவன் உன்தன்
பெருமனதைச் சிலநாளிற் புரிந்து கொள்வான்.''

என்றெல்லாம் ஆறுதல்கள் நளினி கூற
ஏந்திழையாள் கண்கலங்கிக் கேட்க அப்பால்
நின்றபல மாணவரும் விரைந்து சூழ்ந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள்ஏன் கலைநிகழ்ச்சி முடியு முன்னர்
சென்றீர்கள் ரீச்சரெனக் கேட்க லானார்
சேயிழையாள் தன்துயரை மறைத்த வாறே
''நன்றாக நிகழ்ச்சியெல்லாம் நடந்த வென்றே
நானறிந்தேன் அதுவொன்றே போதும்'' என்றாள்.

தன்னுடைய துயரனைத்தும் வெளியே விட்டுத்
தரளநகைப் பூங்கோதை வகுப்புட் சென்றாள்
கன்னலினைக் கொடுப்பாள்போல் மாணாக் கர்க்குக்
கவிதையினைக் கற்பித்தாள் இலக்க ணத்தும்
என்னென்ன மாணவர்க்கு விளங்கா வென்றே
எய்தியதாம் அநுபவத்தால் கண்ட கோதை
அன்னவர்க்கே இலக்கணத்தைத் தெளிவாய்ச்
சொன்னாள்
ஆர்வமுடன் மாணவரும் கேட்க லானார்.

தேவதையாய் விளங்குகின்ற அவளின் தோற்றம்
செய்வதெல்லாம் ஒழுங்குறவே செய்யும் பண்பு
பாவையென அவள்வகுப்பில் உலவும் கோலம்
பத்துமுறை ஐயத்தைக் கேட்டிட் டாலும்
ஆவலுடன் பதில்சொல்லும் பொறுமை உள்ளம்
அவர்கல்விக் கேஉழைத்தல் அனைத்தும் சேர்ந்து
சேவைக்கே அவள் பிறந்தாள் என்று கற்போர்
சிந்திக்கும் நிலையினிலே வைத்த தன்றே.

கல்லூரி மணிஅடித்து வீடு நோக்கிக்
காலெடுத்துப் பூங்கோதை வைத்த வேளை
''நில்லுங்கள் கோதை''என உரைத்த வாறே
வந்திட்டான் அவள்சிறிய தாயின் மைந்தன்
''நல்லதொரு செய்தியிங்கு சொல்ல வந்தேன்
நாளைக்கே எனதுமணப் பதிவு நாளாம்
சொல்லுதற்கு வீடுவர நினைத்தேன் ஆனால்
நேரமையான அலுவல்கள் நேர மில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மைத்துனரும் நீங்களுமே நாளை வந்து
மணப்பதிவைச் சிறப்பித்துக் கொள்ளல் வேண்டும்
எத்துணைபேர் இருந்தாலும் உங்கள் போல
என்மீது பற்றுடையோர் இல்லை'' என்றான்
''மெத்தஉண்மை ஆனாலும் பல கஷ்டங்கள்
விளக்குதற்கோ இவ்வேளை நேர மில்லை
சித்தியிடம் நாம்வருவோம் எனச்சொல்'' என்றே
சேயிழையாள் கோதையும்தான் இயம்பிச் சென்றாள்.

காசொன்றே கருமமெனக் கொண்ட ராஜன்
கருத்துடனே மறுநாளை வழக்குக் கட்டை
மேசைமிசை வைத்தபடி ஆயும் வேளை
மெல்லியலாள் கோதையுமே அங்கு சென்று
பேசுதற்காம் துணிவுதனை அழைத்துக் கொண்டு
''கேட்டீரோ ஒருசேதி என்பால் மிக்க
நேசமுறு சித்தி மகன் கல்லூரிக்கே
நிகழுமொரு சுபசெய்தி சொல்ல வந்தான்?''

''வீட்டிற்கு வரநேரம் இல்லை என்றும்
மேவுமொரு மணப்பதிவு நாளை என்றுங்
கூட்டிஉமை வரும்படியும் சொன்னான்'' என்றாள்
கோபித்துக் கோதையினை ராஜன் பார்த்தே
''கோட்டினிலே நாளைமிக வேலை உண்டு
கொஞ்சமுமோ உனக்கறிவோ இல்லை மற்றும்
வீட்டினிலே இருந்தபடி தந்தி ஒன்றில்
விருப்பம்போல் வீவெடுக்க வாத்தி நானோ.''

## எதற்கும் மறுப்பு

உன்சித்தி மைந்தனுக்கோ வீடு வந்தே
உளமார அழைப்பதற்கோ நேர மில்லை
என்தனுக்கு மட்டும்தான் நேரம் உண்டோ?
இதுமுறையோ தெரிந்தோரைக் கேட்டுப் பாராய்
அன்னவன்பாற் பற்றிருந்தால் நீயே செல்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குநான் வரேன்'' என்றே கூறிவிட்டுப்
பின்னுமவன் வழக்குகளை ஆய லானுன்
பெய்வளையாள் பேசாது விலக லானுள்:

மற்றநாள் கல்லூரி சென்ருள் தன்னை
மனமுவக்கும் தோழியாம் நளினி கண்டே
''பெற்றெடுத்தாள் தங்கைமகன் வாழ்வில் இன்ருே
பெருநிகழ்ச்சி உளதென்ருர் நீஇங் குள்ளாய்
உற்றதென்ன உரைத்திடெனக் கேட்ட வேளை
ஒன்றுமே சொல்லாமல் அழுதாள் கோதை
மற்றவளின் துயரத்தைத் தாங்காள் ஆகி
மங்கையாம் நளினியுமே சொல்ல லானுள்.

''திருமணத்தின் முன்உன்போல் மகிழ்ச்சி யாகத்
திகழ்ந்தோர்இக் கல்லூரி தனில்யார் அம்மா
ஒருகுறையும் அறியாத குழந்தை போல
உவப்புடனே இருந்திட்டாய் ஆனல் இன்ருே
உரியசுத ந்திரம்அற்றே அடிமை போல
உகுக்கின்ருய் இருவிழியால் கண்ணீர் தன்னை
பெருவருத்தம் நினைஎண்ணி எனக்கே என்று
பெருகுகின்ற கண்ணீரின் உடனே சொன்ஞள்.

''படர்கொடிக்குக் கொம்புதான் துணைவன்'' என்றே
படித்திட்டேன் உன்வாழ்வில் அதனைக் காணேன்
நெடுமனையும் பெரும்பொருளும் கொடுத்த பெற்ருேர்
நின்சிரிப்பை அமைதியினை அகற்ற என்றே
இடர்விளைக்கும் கொடுமுள்ளைக் கொணர்ந்து விட்டார்
எதிர்காலம் எப்படிப்போம் எனயார் தேர்வார்
கொடுவிதியால் ஆய்வின்றி நிகழ்வதான
குறைமலிந்த திருமணங்கள் பலவே என்ருன்;

''குலமென்னும் மலையினிடைப் பிறந்த தான
குற்றமிலா நன்மணியே நின்றன் கேள்வன்
நலமனைத்தும் நிறைந்தஉனைக் கற்பின் பொற்பை
ஞாயமின்றி ஐயுற்ற கொடுமை கேட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளமனைத்தும் துடிக்கின்றேன் அந்த ஐயம்
எவர்குறித்தென் றுன்னவனைக் கேட்பா யாகில்
நிலவுமொரு ஐயத்தை அவன்பாற் சென்றே
நீக்குதற்கு முயன்றிடுவேன்'' என்றும் சொன்னாள்;

தோழிசொன்ன வார்த்தையினைக் கேட்ட அந்தத்
தோகையாம் பூங்கோதை அவளைப் பார்த்தே
''வாழியநின் அன்புள்ளம் இதனைப் பற்றி
வையகத்தில் பன்னாள்நான் ஆய்தல் செய்தேன்
நாளனைத்தும் நூல்களுடன் காலம் போக்கும்
நற்பண்பன் துரையெனவே காணு கின்றேன்
பாழுமொரு சந்தேக மனம் கொண்டோர்க்குப்
பசாசுக்கும் கடவுளுக்கும் பேதம் உண்டோ?''

என்றேதான் கூறுதலும் நளினி என்பாள்
''என்னம்மா இதிற்கொடுமை உலகில் உண்டோ?
நன்றெல்லாம் திரண்டெடுத்த வடிவம் கொண்டோன்
நானிலத்தே பிறன்மனையைத் தெய்வ மாக
என்றென்றும் வணங்கிடுவோன் பெண்கள் தம்மை
என்றென்றும் மதித்திடுவோன் அவனைத் தானு
நின்றுணைவன் ஐயுற்ருன் நானே சென்று
நின்றுணைவன் ஐயத்தைத் தீர்ப்பேன்'' என்ருள்.

''என்னிடத்தே உனக்கிருக்கும் பேரன் பாலே
இவ்வாறு கூறுகிருய் நளினி! ஆனுல்
உன்னுடைய எண்ணம்போல் சுலப மாக
உடனிதனை நீதீர்த்தல் இயலா தம்மா
நன்மனம்சேர் நின்தந்தைக் கிதனைச் சொல்வோம்
நன்கவர்சொற் படிநடப்போம் என்றும் சொன்னுள்
பின்னரவர் கல்லூரி முடிந்த வேளை
நளினியது தந்தையினைக் காணச் சென்ருர்;

பூங்கோதை உரைத்தவற்றை நளினி தந்தை
பொறுமையுடன் கேட்டுப்பின் அவட்குச் சொன்னுர்
''பூங்கோதாய் நினக்குற்ற துன்பம் கேட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரவலம் கொள்கின்றேன் குடும்ப வாழ்வில்
தீங்கெனினும் நன்றெனினும் இரண்டு பேரும்
தீர்த்திடல்தான் சரியான வழியே ஆகும்
ஈங்குனது துயர்தீர்க்க மூன்றும் ஆளால்
எதுவும்தான் ஆகாதே அதனால் நீயும்''

''பொங்கிவரும் துயர்கண்டே கலங்கிடாது
பொறுமையுடன் நாள்களினைப் போக்கிக் கொள்வாய்
மங்கையர்க்குள் நீதெய்வம் என்ற உண்மை
மாநிலமே நன்கறியும் வருந்தி டாதே
தங்காது சுழல்கின்ற இப்பூ மிக்கண்
சஞ்சலமும் நிலைப்பதில்லைக் காலம் மாறும்
திங்களொன்று பொறுத்திடுவாய் பின்னும் துன்பம்
தீராக்கால் நான்முயல்வேன்'' என்றும் சொன்னாள்.

நன்றிசொல்லிப் பூங்கோதை வீடு சென்றாள்
நான்குபேர் வீட்டினிலே காத்து நின்றார்
''இன்றுங்கள் உதவியினை நாடி வந்தோம்''
என்றார்கள் ''சொல்லுங்கள்'' என்றாள் கோதை
என்றுமுறாப் பெருங்கஷ்டம் தன்னை இந்நாள்
எய்தியதே ''அநாதைஇல்லம்'' அதற்கு நீங்கள்
குன்றிமணி அனையபொருள் உதவி னாலும்
குவலயத்தே பெரிதாகக் கொள்வோம்'' என்றார்:

''இருங்களென அவளுரைத்தே வீட்டுட் சென்றே
இயன்றபொருள் எடுத்தங்கே வந்த வேளை
வருகைசெய்தான் அவள்கணவன் ராஜன் என்பான்
வந்தோரைக் கோதையின்கைப் பணத்தைப் பார்த்தே
''தருமமென்றும் முத்தியென்றும் சாட்டுச் சொல்லி
சாப்பிடுவோர் தமைஎனக்கோ பிடிப்ப தில்லை
ஒருகணத்தே நால்வருமே செல்வீர்'' என்றான்
நடுநடுங்கி நால்வருமே ஓட லானார்.

எம்மொழியும் பேசாதே கோதை தானும்
ஏகித்தன் அறையினிலே இருந்த வாறே
இம்மனிதர் போல்மனிதர் இருத்தல் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரைநான் அறிந்ததில்லை அர்த்தம் இன்றி
என்மனத்தை வருத்துதலே குறிக்கோ ளாக
இவர்கொண்டார் இவர்திருந்தி என்றென் வாழ்வு
செம்மையுறும் எனும்எண்ணம் சிறிதும் இல்லேன்
செய்வதென்ன இனியென்றே நினைக்க லானாள்.

குற்றமெதும் செய்யாதே கொடுஞ்சொல் மட்டும்
குவலயத்தே கேட்கின்றேன் என்றன் அன்புச்
சுற்றத்தோர் யாவருமே மெல்ல மெல்லத்
தொலைதூரம் எனைப்பிரிந்தே செல்ல லானார்
பற்றிலர்க்கும் ஏழையர்க்கும் கொடுப்ப தான
பாக்கியத்தை இழந்துள்ளேன் இதற்குப் பின்னும்
உற்றதுவாம் இல்வாழ்வு தேவை தானோ
எனவேதன் உள்ளத்தே நினைக்க லானாள்

''பண்பான நற்குடியிற் பிறந்தேன், என்றும்
பாகான இன்சொல்லே பெற்றோர் சொன்னார்
அன்பாக ஊரினர்கள் மதித்தார் என்னை
அயலோரும் மதிப்புடனே நடத்திக் கொண்டார்
நண்பாக இருந்தோரும் கற்றோர் மிக்க
நாகரிகம் வாய்ந்திட்டோர் இந்த வாழ்வு
முன்போநான் கருதாத கொடுமை'' என்றே
மொய்குழலாள் மிகஎண்ணி வாட லானாள்.

## திருமணமாம் பெருஞ்சிறை

''பறவையெனச் சுதந்திரமாய் இருந்தேன் என்றும்
பண்பென்னும் பெருவானிற் பறந்தேன் நாளும்
அறிவுலகத் தொடர்புகளால் உயர்ந்தேன் போற்றும்
ஆசிரியத்தொழில் பெற்றேன் ஆன மட்டும்
உறவினர்க்கும் ஏழையர்க்கும் உதவி ஆனேன்
உவப்புற்றேன் கொடுப்பதிலே எல்லாம் மாறிச்
சிறையினிலே அகப்பட்டார் போல நானும்
திருமணமாம் பெருஞ்சிறையின் உட்பட் டேனே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுபல பூங்கோதை எண்ணி எண்ணி
இதயமெலாம் நொந்திட்டாள் உயர்ந்த தான
குன்றிலிட்ட ஒருதீபம் வீசும் காற்றின்
கொடுமையினுற் துடிப்பதுபோல் துடிக்க லானுள்
"ஒன்றல்லப் பலதுன்பம் ஒன்றை ஒன்று
விஞ்சுகின்ற பெருந்துன்பம்! மணந்தான் நெஞ்சம்
என்றேனும் மாறுமா என்னும் கேள்வி
எழும்பின்னர் இல்லை"யெனும் முடிவை எய்தும்

மலர்களிலே அனிச்சம்பூ மெல்லி தாகும்
மற்றதனில் விருந்தினுளம் மெல்லி தாகும்
நலன்மிகுந்த கோதையுள்ளம் இவற்றிற் பார்க்க
மெல்லிதென ராஜனவன் அறிந்தான் இல்லை
நலன்நிறைந்த மாதர்தமை இன்சொல் ஒன்ருல்
நன்குவசப் படுத்திடலாம் என்ப தான
கலைத்திறத்தை ஆடவரிற் பல்லோர் என்றும்
காணுது போகின்ருர் அந்தோ பாவம்!

திங்கள்நிகர் கோதையுமே அடுத்த நாளில்
கல்லூரி வகுப்பினிலே இருந்த வேளை
"உங்களினை அதிபர்வரச் சொன்னுர்" என்றும்
"உடன்" என்றும் "பியோன்" சொன்னுன் கோதை
தானும்
அங்கிருந்த மாணவரை "அமைதி கொள்வீர்
அடுத்தவகுப் பினுக்கிடைஞ்சல் வேண்டாம்" என்ருள்
தங்காமல் அதிபரிடம் விரைந்து சென்ருள்
தயைநிறைந்த அதிபருமே கூற லானுர்.

"கோதாய்கேள் எதற்குமே பதட்டம் வேண்டாம்
கொஞ்சம்முன் தொலைபேசி தனிலே அந்த
நீதிமன்றில் இருந்தொருவர் செய்தி சொன்னுர்
நின்கணவன் வழக்கொன்றிற் பேசுங் காலை
ஏதோசெய் கிறதென்றே வீழ்ந்திட் டானும்
இருந்தோர்கள் அவசரமாய்க் காரில் ஏற்றி
ஆதரவாய் மருத்துவம்செய் சாலை சேர்த்தே
அங்குளராம் நின்னைஎதிர் பார்த்தே" என்ருர்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உதவிக்கு நளினியைநீ வேண்டு மாகுல்
உடன்அழைத்துச் செல்''என்றும் அதிபரி கூற
மதுநிகர்த்த மொழியாளும் சிறிது நேரம்
மனம்கலங்கிப் பேசாமல் இருந்த பின்னர்
''அதிபரே உம்கருணை உள்ளத் திற்கே
ஆயிரமா யிரம்நன்றி சொன்னேன்'' என்றே
அதிபரிடம் விடைபெற்றுத் துணைவன் தங்கும்
மருத்துவசா லைநோக்கி விரைந்தாள் கோதை

மருத்துவசா லைவாயில் தனிலே நின்ற
வழக்கறிஞன் ஒருவன்''வா அம்மா நின்தன்
அருந்துணைவற் கேதுமில்லை அஞ்சவே ண்டாம்
அவனிருக்கும் இடம்காட்டு கின்றேன்'' என்றே
பெருந்துயரே வடிவாகி நின்ற கோதை
பின்தொடரச் சென்றிட்டான், ராஜன் என்பான்
வருத்தமதை முகம்காட்டக் கட்டிற் கண்ணே
படுத்திருந்தான் கோதைஅயல் சென்றிட் டாளால்

அப்போது தாதிவந்தாள் கண்ணீர் சிந்தும்
அழகியபூங் கோதையினைப் பார்த்துச் சொன்னுள்
''இப்போது நின்கணவற் கோய்வு தேவை
எதற்கும்நீ வருந்தாதே சிறிது போழ்தில்
இப்போதை மயக்கம்தான் நீங்கிக் கொள்ளும்
என்றேதான் மருத்துவரும் சொன்னுர்'' என்றுள்
செப்பரிய குணக்கோதை கேட்ட போதும்
சிந்துகின்ற அவள்விழியோ ஓய வில்லை

தாதிபின்னும் சொல்லிடுவாள் ''இன்னும் சின்னுள்
தங்கிடவே வேண்டிவரும் ஆண்கள் வாட்டில்
மாதர்நிற்க அநுமதியார் பார்க்கும் போது
வசதியுள்ளீர் போறகாணப் படுகின் றீர்கள்
ஆதலினுற் பணம்செலுத்தும் வாட்டி னிற்கே
அநுமதிநீர் பெற்றிடுதல் நன்றே'' என்றுள்
கோதையுமே அதைக்கேட்டே ''ஒழுங்கு செய்வீர்
கொடுக்கின்றேன் பணம்'' என்றே கூறலானுள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவ சாலையில்

மருத்துவ சாலையில் நாட்சில வாக
ராஜன் இருந்தனன் உறவினர் யாவரும்
காலையும் மாலையும் வந்தே பார்த்தனர்
அல்லும் பகலும் கோதையோ அவ்விடம்
அகலா ளாகி இருந்தனள் அவள்விழி
உறங்கா நிலையை உரைத்தது; மேனியோ
வாடிய மலராய்த் தோற்றம் செய்தது
எத்துணைக் கொடுமைகள் கொண்டோன் இளைப்பினும்
அவற்கோர் இடரெனின் அந்தக் கணமே
அத்துணைக் கொடுமையும் மறந்தே பணிசெயும்
பண்பில் தமிழ்ப்பெண் தெய்வமே அன்றோ?
பல்வகைத் துயரால் வாடியே இருந்த
எல்வளைக் கோதைபால் ஒருவன் வந்தே
"அம்மா உங்களை டாக்டர் அழைத்தார்"
என்றே சொல்லலும் கோதை அவ்விடம்
விட்டே நீங்கிச் சென்றனள் வாயிலில்
தாதியர் இருவர் நின்றே தத்தம்
பணிகள் பற்றிப் பேசினர் கோதைதான்
அப்பாற் செல்லலும் ஒருத்திமற் றொருத்தியை
நோக்கிச் சொல்வாள் "அதோ செல்கின்ற
இளமையும் அழகும் நிறைந்துள பாவை
எய்த இருக்கும் பேரிடர் தன்னை
எண்ண எண்ண நெஞ்சுபுண் ணாகுதே
இந்த வயதில் இவளின் வாழ்வு
இப்படிப் போக உளதே" என்றாள்
அதற்கு மற்றவள் "அப்படி என்ன
அதனை விளங்கச் சொல்நீ" என்றனள்
முதலிற் சொன்னவள் தொடர்ந்து கூறினள்
இவள்கொழு நற்கோ "பிளட்கான்சர்" என
எங்கள் டாக்டர் ஐயமே கொண்டனர்
கொழும்பில் இருந்தும் ராஜன் பற்றிய
பரிசோ தனையின் முடிவுகள் வந்திடின்
டாக்டரின் ஐயம் நிச்சயம் ஆய்விடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இவர்நோய் பிளட்கான் சர்ளில்
இன்னுமோர் திங்கள் தான்இவர் வாழ்வென
டாக்டர் உரைத்தார் இறப்போற் காக
என்னுளம் சற்றும் ஏங்கிட வில்லை
இளமையும் அழகும் நிறைந்தஅம் மங்கை
மக்கட் செல்வம் எய்திடும் முன்னே
பூவும் இழந்து பொட்டும் இழந்து
தூய வெள்ளை ஆடையே உடுத்து
''விதவை'' என்னும் கொடும்பெயர் தாங்கி
மங்கள நிகழ்வினிற் பங்குறல் இன்றி
ஒதுங்கிடும் நிலைவர உளதே என்று
எண்ண நெஞ்சம் துடித்திடும் என்றுள்
மற்றத் தாதி அதற்குச் சொல்வாள்
''என்னுயிர்த் தங்கை செல்லமாய் வளர்த்தோம்
எல்லாச் செல்வமும் எய்தியே இருந்தாள்
காலைஓர் நிறத்தும் மாலைஓர் நிறத்தும்
சேலையை உடுப்பாள் சட்டையின் நிறமோ
சற்றுப் பொருந்தா விட்டாற் கூட
எட்டுக் கடைகள் ஏறியே இறங்கிச்
சேலைக் கேற்ற சட்டைவாங் கிடுவாள்
அப்படி வாழ்ந்த அவளோ இன்று
விதவை ஆனாள் எல்லாம் இழந்தாள்
ஒரேநிறச் சேலை ஒரேநிறச் சட்டை
அதுதான் வெள்ளை அதுதான் வெள்ளை
விதவை என்னும் நிலையினில் தமிழ்ப்பெண்
கொழுநனை இழக்கும் அதேநே ரத்தில்
அனைத்தையும் இழக்கிறாள் அந்தோ பாவம்''
என்றே கூறினள் மேலும் அவர்கள்
ஏதோ ஏதோ எல்லாம் பேசினர்

## இன்னும் ஒரு திங்கள்

உறக்க நிலையில் ராஜன் இருப்பதாய்
எண்ணி இவர்கள் பேசினர் அவனோ
கண்ணை மூடிக் கிடந்த போதிலும்
விழிப்பு நிலையில் இருந்தனன் வாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமோர் திங்கள் என்பதைக் கேட்டதும்
அதிர்ந்தே போனான் அந்த அதிர்ச்சியில்
இருதயம் மிக்க வேகமாய் அடித்தது
அச்சம் ஒன்று மூளையுட் புகுந்தே
அலைத்தது அலைத்தது அலைத்தே நின்றது
டாக்டர்பாற் சென்ற கோதை மீண்டனள்
படுக்கையிற் கிடந்த துணைவன் கண்களால்
கண்ணீர் பெருகும் காட்சியைக் கண்டனள்
திருமணம் முடிந்த நாள்முதல் இதுவரை
கணவன் கண்ணீர் சொரிந்திடல் தன்னைக்
கண்டே அறியாக் கோதை கலங்கினள்
''என்ன நடந்தது ஏன்கண் ணீர்'' எனத்
திடுக்கிட் டாற்போற் கேட்டனள் கோதை
கண்ணை விழித்தனன் ராஜன் கண்களில்
முன்னர் இருந்த கடுமைகள் இல்லை
அச்சம் அன்பு இரண்டுமே இருந்தன
திருமணத் தன்று பார்த்ததே போல
ஆவல் ததும்பக் கோதையைப் பார்த்தனன்
பின்னும் கண்கள் கண்ணீர் சொரிந்தன
''என்ன வேண்டும் சொல்வீர்'' என்றே
கோதை கேட்டே தன்மலர்க் கரத்தால்
பெருகும் கண்ணீர் தன்னைத் துடைத்தவள்
''என்மன நிலையை என்இடர் தன்னை
எவ்விதம் நினக்கே இயம்புவேன் கோதாய்!''
என்றே வினவினன் பின்னர் அமைதி
இருவர் கண்களும் கண்ணீர் சொரிந்தன.
''உடல்நலம் விரைவில் தேறிடும்'' என்றனள்
''எல்லாம் அறிவேன்'' என்றவன் கூறினன்
''குடிப்பதற் கெதுதான் வேண்டும்'' என்றனள்
''விருப்பம் போல நீதா'' என்றனன்
அவனது பேச்சில் அவனது பார்வையில்
திடீரெனத் தோன்றிய மாற்றம் தன்னைக்
கோதை கண்டனள் என்னவா யிருக்கும்
என்றே தனது சிந்தையைக் குழப்பினள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றைப் பொழுது கழிந்தது மறுநாள்
காலைப் பொழுதில் ராஜன் என்பவன்
''கோதாய் இப்படி அமர்வாய்'' என்றனன்
கட்டிலின் அயலில் இருந்த தால
கதிரையிற் கோதையாம் காரிகை அமர்ந்தனள்
''என்மனத் துள்ளவை அனைத்தையும் இன்றே
சொல்லிட ஆசை ஒழுங்குற அவற்றினைச்
சொல்லிடு வேனே என்பதில் ஐயம்!
ஆதலால் என்தன் மனத்துள அனைத்தையும்
எழுத்தில் வடித்தனன் இதோபடி படிக்குமுன்
அதிர்ச்சி ஒன்றினைத் தாங்குதற் கான
ஆயத் தம்செய்'' என்றே கொடுத்தனன்
கோதையின் கைகள் நடுங்கின முகத்தில்
ஏதோ மாற்றம் திடீரென நிகழ்ந்தது
கடிதம் தன்னைக் கையினில் வாங்கி
விரைந்தே படித்தனள் விழிகளோ கலங்கின.

## அந்தக் கடிதம்

''குணமென்னும் குன்றினிலே ஒளிசெய் கின்ற
குலவிளக்கே! நறுமலரே! உன்னை நானே
மணமென்ற பெயராலே அடிமை ஆக்கி
மண்ணகத்தே பெரும்பாவம் புரிந்து விட்டேன்
கணமேனும் நிம்மதிநீகாண வண்ணம்
கடுமையுடன் நடந்திட்டேன் என்றீங் கெல்லாம்
பணிமொழியே நீபொறுத்தாய் நான்செய் பாவம்
பயன்செய்யத் தொடங்கிற்றே அதைக்காண் கின்றேன்''

''நின்னுடைய பேரழகோ என்தன் சொந்தம்
நீபுரியும் இன்னகையும் எனக்கே சொந்தம்
நின்னுவால் வரும்இனிய வார்த்தை யாவும்
நிலத்திடையே என்தனுக்கே என்றும் சொந்தம்
நின்னுடைய நேரமெலாம் எனக்கே சொந்தம்
எனநினைத்தேன் நின்அழகின் மயக்கத் தாலே
இன்னொருவர் நின்னுடனே பேசி னாலும்
என்னுடைய பொறுமையினை இழக்க லானேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயமிதாய் இருந்திடலாம் அன்றி மற்றும்
அழுக்காறுய் இருந்திடலாம் எதுவா னுலும்
மைவிழியே நின்னழகின் போதை செய்த
மயக்கத்தால் என்றுலீநீ நம்பு வாயா?
செய்தவெல்லாம் தவறென்ற ஞானம் தன்னேச்
செகத்திடையே இன்றைக்கே நான்பெற் றிட்டேன்
மெய்ந்நெறியே' மிகமேவும் கோதாய் இன்று
மேவியதோர் ஞானத்தாற் பயனும் உண்டோ?''

''ஓவியத்தின் பெருமையினே உணர்ந்த வேளே
ஒப்பற்ற விழிகளினே இழத்தல் போல
ஆவியினேக் கொள்கின்ற இசைவந் தெய்தும்
அவ்வேளே செவிசெவிடாம் தன்மை போல
பாவிஇவன் நின்பெருமை உணரும் வேளே
பாரினில்வாழ் தகுதியினே இழக்க லானேன்
நோவதினுல் இனிப்பயன்என் என்னே நானே
குழப்பினேன் அதற்காக நோகின் றேனே.''

ஒப்பற்ற பெரும்செல்வ மாக நீஎன்
உயிர்த்துணேயாய் வந்தெய்த அதைநோக் காதே
இப்புவியில் நிலேயாத செல்வம் நாடி
இரவுபகல் அலேந்திட்டேன் நான்சேர்த் திட்ட
அப்பெரிய பணக்குவையோ இன்றே என்தன்
ஆத்மாவைத் தடுத்திடுமோ மார்க்கம் காணேன்!
செப்பரிய குணம்படைத்த மனேயாள் அன்றிச்
செகத்திடையே கணவனுக்கோர் செல்வம் உண்டோ?''

கண்களினுல் நீர்பெருகக் கோதை என்பாள்
கணவனது கையதனேப் பற்றிக் கொண்டே
''என்துணேவ நடந்தவெலாம் மறந்து போவோம்
இனிக்கடிதம் பின்படிப்போம்'' என்றே சொன்னுள்
''அன்புடையோய் முற்றுகப் படித்த பின்தான்
அனேத்தையும்நீ புரிந்திடலாம்'' என்றுன் ராஜன்
தன்துணேவன் பணித்தபடி கோதை தானும்
கடிதத்தைத் தொடர்ந்தேதான் படிக்க லானுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்அழகை உன்தொழிலை உன்செல் வத்தை
உயர்ந்ததெனப் புரிந்திட்டேன் சிறிது தானும்
உன்னுளத்தைப் புரியாமல் இருந்தே விட்டேன்
உத்தமியே நின்னுளத்தை யாதே சொல்வேன்
தன்துணைவற் கின்னலெனத் துடிக்கும் உள்ளம்
தர்மத்தைப் புரிவதிலே மகிழும் உள்ளம்
இன்னலினை எறும்புக்கும் எண்ணு உள்ளம்
இத்தகைய உள்ளமதே நின்றன் உள்ளம்.

## அயல் வீட்டுப் பெண்

அன்றொருநாள் வீட்டிருந்து கோடு நோக்கி
அவசரமாய் நான்செல்ல அயல்வீட் டுப்பெண்
"நின்றிடுங்கள்" என்றிட்டாள் நானும் நின்றேன்
"உங்களுக்கோர் செய்தியென்றுன் சொல்வாய் என்றேன்
"ஒன்றுமறி யாக்குழந்தை உள்ளம் கொண்ட
உத்தமியாள் பூங்கோதை அவளை நீங்கள்
என்றுமே சுடுசொல்லால் துடிக்கச் செய்யும்
இயல்புடையீர் எனஅறிந்தேன் உண்மை யானுல்"

"பணிவுடனே ஒன்றுரைப்பேன் கேட்பீர் ஐயா
பாவையந்தப் பூங்கோதை யெனும்நல் லாளைத்
துணைவியென நல்வினையாற் கொண்டீர் இன்று
துன்பமுறச் செய்கின்றீர் கோதை என்றுல்
அணிமிகுந்த இவ்வூரார் முதியர் சேயர்
அனைவருமே மதிப்பதினை அறியீர் போலும்
குணவதியை இனியேனும் புரிந்து கொண்டு
கூறுமிரு பறவையென வாழ்வீர் என்றுள்"

"நானெதுவும் கூறுமல் விரைந்தேன் அப்பால்
நங்கைசொல்லை நான்சிறிதும் மதித்தேன் இல்லை
தேனேஉன் குணங்களினைப் புரிந்தேன் இல்லை
தெரிந்தோர்கள் சொல்வதையும் கேட்டேன் இல்லை
நானேஓர் நோயாகி நின்றன் வாழ்வை
நாசமுறச் செய்திட்டேன் கெடுத்தேன் என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணான நம்வாழ்வோ என்மாற் றத்தால்
விடிவொன்றைக் காண்பதற்கோ காலம் இல்லை''

''இன்னுமொரு திங்களிலே என்றன் வாழ்வு
இற்றுவிடும் என்பதினை அறிந்தேன் இந்நாள்!
முன்னெனக்கு மரணமது நிசம்என் கின்ற
முழுஉண்மை தெரியாமற் போன தாலே
உன்வாழ்வை நான்கெடுத்தேன்! ஈசன் கோயில்
ஓர்நாளும் செல்லாமல் வீணே வாழ்ந்தேன்
நன்மைதரும் தர்மமெனும் உண்மை தன்னை
நான்அறியா திருந்திட்டேன் அறிந்தேன் இன்றே''

''உறவினரைக் கூப்பிடுவாய் பார்த்தல் வேண்டும்
உயர்ந்தோரை அழைத்திடுவாய் வணங்கல் வேண்டும்
அறமனைத்தும் செய்வதற்கே என்செல் வத்தை
அள்ளிஅள்ளிக் கொடுத்திடுவாய் திங்கள் உள்ளே
இறைவனது கோவிலுக்கு அழைத்துச் செல்வாய்
இறப்பதன்முன் அவன்அழகைக் காண வேண்டும்''
நெறியுடையோய் உனைக்கட்டுப் பாட்டுள் வைத்த
நீசனெனை நீபொறுத்துக் கொள்ளல் வேண்டும்''

''கீழ்வானக் கதிர்த்தோற்றம் நிலாச் செய்கின்ற
கிளர்கரிய அமுதஒளி அன்பு கொண்டே
வாழ்நாளில் மகிழ்கின்ற மானின் சோடி
மணிப்புறவின் கிள்ளைகள்தம் அன்பு வாழ்வு
நாள்தோறும் இருந்திடினும் பார்க்கத் தூண்டும்
நற்கடலின் கரையோரம் யாவும் நானே
வீழ்நாள்வந் துறும்முன்னர் பார்க்க வேண்டும்
மேவுமுயர் குணமுடையோய் கூட்டிச் செல்வாய்''

''அரிதரிது மானிடராய்ப். பிறத்தல் என்ற
அருமொழியை இப்போதே நான்காண் கின்றேன்
வருபிறவி எவ்வாறே அமையும் என்றே
வையகத்தே நான்அறியேன் அன்புக் கோதாய்
இருவயதிற் கல்வியினை எனக்கே தந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வநிகர் ஆசிரியர் மற்றும் என்றன்
பெருமைமிகு நண்பர்கள் இவரை ஆவி
பிரிவதன்முன் காண்பதற்கே ஆவல் கொண்டேன்''

''உருவதனைத் தொடர்கின்ற நிழலே போலும்
உயிரதனைத் தொடர்கின்ற வினையே போலும்
வருவதுதான் மரணமென ஏனோ என்றன்
வாழ்வினிலே மறந்திருந்தேன் நினைத்திருந்தால்
அருமைமிகு நம்வாழ்வைச் சிதைத்திடாமல்
அவனிதனில் வாழும்நாள் சிறிதென்றெண்ணி
மரணமது எய்துமுன்னர் இயன்ற மட்டும்
மனதார நல்லனசெய் திருப்பேன் நானே''

''காலற்ற பின்நடனக் கலைமேல் ஆசை
கண்போன பின்சிற்பக் கலைமேல் ஆசை
ஞாலத்தே கொள்வதிலே பயனென்றில்லை
நானிந்த உண்மையினைத் தெரிந்தேன் இன்றே''
நூலொத்த இடைக்கோதை கடிதம் தன்னை
நோக்குதற்கே இயலாளாய்க் கண்ணீர் சிந்தி
ஞாலத்தைப் பிரியஉளோன் முகத்தை அன்பை
நவில்கின்ற விழிகளினால் உற்றுப் பார்த்தாள்

''சற்றேனும் தயங்காது கடிதம் தன்னைத்
தண்மொழியே படித்திடுவாய் படித்தாயாகில்
முற்றாக என்மனத்தைப் புரிந்து கொள்வாய்
முழுமனதாய் மன்னித்துக் கொளலும் கூடும்
பற்றுடையோய் மன்னித்தேன் என்பதான
பயன்மொழியை நீமொழிந்த பின்னரே தான்
''குற்றமிலா தென்மனது குளிர்தல் கூடும்''
குவலயத்தே என்றிட்டான் படித்தாள் கோதை

## காலம் கடந்த ஞானம்

''இன்றோ உன்னைப் புரிந்தனன் கோதாய்!
இன்றே என்னையும் புரிந்தனன் கோதாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மரணம் அயலில் வந்துள தென்ற
உண்மை தெரிந்ததும் என்னிடத் திருந்த
அகந்தை யேகிட அவ்விடம் தன்னைக்
கருணை வந்து பிடித்ததென் கோதாய்!
உன்னுடன் வாழும் வாய்ப்பினை விதிதான்
தந்திடும் ஆயின் அன்பெனும் குன்றில்
நின்னை இருத்திச் சுதந்திரம் என்னும்
நன்மலர் தூவிப் பூசனை செய்வேன்
அப்படி எனக்கோர் வாய்ப்பினை விதிதான்
செப்பிடுங் காலை நல்கவே இல்லை
மீண்டும் கேட்டேன் என்னைமன் னிப்பாய்
இப்படிக் குன்தன் துணைவன்'' என்றே
கடிதம் தன்னில் இருந்தது கோதை
கடிதம் படித்து முடிந்ததும் ஒருவன்
''அம்மா உங்களை டாக்டர் அவசரம்
வருமா றழைத்தார்'' என்றே மொழிந்தனன்
ராஜனும் அவ் வேளை கோதையை நோக்கி
''இவர்போல் தகுதி வாய்ந்தவோர் டாக்டரை
என்தன் வாழ்வில் கண்டிலேன் கோதாய்
இரவும் பகலும் நோயா ளர்தம்
நினைப்பே அவர்தம் நெஞ்சினில் இருக்கும்
இன்முகத் துடனே வருகை செய்திடுவார்
இன்சொல் லுடனே கடமையைத் தொடர்வார்
நோயா ளர்தம் உளத்தையும் நோயையும்
படித்தே பணிசெயும் பெரும்பண் பாளன்
இறைவனைக் காண அவாவெழும் வேளையில்
இவரைக் கண்டே அதைத்தீர்க் கின்றேன்
அத்தகு நல்லோன் அழைக்கின் றுன்நீ
அவசரம் செல்வாய் அழுவதை விடுப்பாய்
டாக்டர்பால் நீதான் சென்றுமீண் டதுவும்
நீஅழ நானும் நின்னுடன் அழுகிறேன்
இருவரும் சிரிப்பதிற் சேர்ந்திடா திருந்தோம்
இருவரும் அழுவதிற் சேர்ந்தே இருப்போம்
இருக்கும் காலம் இன்னுமோர் திங்கள்
இருவரும் சேர்ந்தே அழுவோம்'' என்றுன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதை மெல்ல எழுந்தே டாக்டரின்
அறைக்குச் சென்றனள் டாக்டர் கோதையை
''அம்மா அமர்க'' என்றே மொழிந்தனர்
கோதையின் கண்ணீர் கோதையின் கோலம்
கண்ட டாக்டர் மேலும் சொல்வார்
"நீஆ சிரியை நின்தொழில் புனிதம்
மாணவர் தமக்குக் கல்வியை வழங்கிக்
கடமையை விளக்கும் கடமைகொண் டுள்ளாய்
கடமைநம் கையில் விதிநமக் கப்பால்
கடமையைச் செயும்நீ விதிக்கழல் வீணே
என்னிடம் வந்திடும் நோயினர் தமக்கே
என்சுகம் தன்னை மதியேன் ஆகி
அல்லும் பகலும் கடமைசெய் கின்றேன்
அவ்விதி என்னை வெல்லினும் நானே
கடமையில் தோல்வி உறுமையை நினைந்தே
மனத்துயர் இன்றி வாழ்கிறேன் அம்மா
இன்றுமோர் சம்பவம் கடமையில் தோற்றிலேன்
விதியெனை வென்றதே விளம்புவேன் கேட்பாய்
என்றே மொழிந்தனன் கேட்ட கோதையோ
ஏதோ பெரிதாய்ச் சொல்லிட டாக்டர்
''என்னைஆ யத்தம் செய்கிறார்'' என்றே
தன்னுள் எண்ணித் தவித்திடல் ஆயினள்
ஆயிரம் ஆயிரம் மாணவர் தமக்கும்
அவரவர் உள்ளம் அறிந்தே கல்வியை
ஊட்டும் கோதை டாக்டர் எதையோ
சொல்ல முயலும் நிலைவிளங் காளா?
''ஐயா சொல்வதை விரைந்தே சொல்லுக''
என்றே கூறினள் டாக்டர் நிதானமாய்
அம்மா நின்தன் கணவனின் நோய்தான்
யாதென முன்நான் அறிந்த போதும்
நிச்சயம் செய்யக் கொழும்பின் முடிவை
நோக்கி இருந்தேன் இரண்டு முடிவும்
ஒன்றே ஆக அமைந்தது கண்டேன்
அதனைச் சொல்லவே அழைத்தனன் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு யாது சொல்லுக என்றே
கோதை கேட்டதும் டாக்டர் சொன்னார்
'பிளட்கான் ச'ரெனும் நோயிதே அம்மா
என்றெனச் சொல்லேன் இன்னுமோர் திங்களில்
உன்தன் திலகம் அழிந்திடும் என்றனன்
கேட்ட கோதை அதிர்ந்தனள் பின்னர்
பேச்செதும் இன்றிக் கணவனின் அறைக்கு
விரைந்தே சென்றனள் கணவனின் கட்டிலில்
வீழ்ந்தே புலம்பினள் துணைவன் ராஜன்
ஆதர வுடனே அணைத்தவள் கண்ணீர்
தன்கரம் கொண்டே துடைத்தனன் அழுதனன்
வைத்திய சாலையின் அயலில் நின்ற
உயர்பெரும் தெங்கின் ஓர்பச் சோலை
அண்மையில் வீசிய வன்பெருங் காற்றால்
முறிந்து தொங்கியதே அப்பச் சோலை
காலையில் விழுமோ மாலையில் விழுமோ
இன்றுதான் விழுமோ இன்னும் சிலநாட்
சென்றுதான் விழுமோ என்றுயார் அறிவார்
வன்பெருங் காற்றுத் தாக்கிடும் வேளை
குருத்தாம் ஓலை பச்சையாம் ஓலை
காய்ந்ததாம் ஓலை என்றுபார்த் திடுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிறநூல்கள்

- காதலும் கருணையும்
- இருவேறு உலகம்
(சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது)
- இரண்டு வரம் வேண்டும்
(யாழ் இலக்கிய வட்டப் பரிசு பெற்றது)
- தையல்நாயகி அம்பாள் திருப்பள்ளி எழுச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org